# இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

"வாருங்கள்! அகமகிழ்வுடன் ஆண்டவரது இல்லத்திற்கு போவோம்"

இறை இயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் கிறிஸ்து அரசர் பெருவிழா வாழ்த்துக்கள் கூறி அன்போடு வரவேற்கின்றோம். இன்று நம் அன்னையாம் திருஅவை அனைத்து உலகுக்கும் அரசராம் கிறிஸ்து அரசர் பெருவிழாவினைக் கொண்டாடி மகிழ்கின்றது.

அரசர் என்பதற்கும் அரசுரிமை என்பதற்கும் புதிய அத்தியாயத்தை எழுதியவர் இயேசு.

அரசர் என்பவர் அடக்கி ஆள்பவர் என்ற அடிமை சிந்தனையை மாற்றி

அன்பு செய்பவர் என்ற புதிய சிந்தனையை கொடுக்கிறார் இயேசு.

அதிகாரம் என்பது ஆட்சி செலுத்துவது அல்ல, மாறாக 'பணிபுரிவதே' என்ற புதிய சமூக அணுகுமுறையைத் தந்தவர் இயேசு. உலகமெங்கும் மன்னராட்சி மறைந்து மக்களாட்சி மலர்ந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் நம் அரசர் நமக்குச் சொல்வது என்ன? அன்பு, நீதி, உண்மை, மகிழ்ச்சி, இரக்கம் போன்ற இறையாட்சி பண்புகளின்படி நாம் வாழவும் இறையாட்சி மதிப்பீட்டிற்கு எதிரான பணம், பதவி, புகழ், பகட்டான வாழ்க்கை முறையை விட்டு விலகவும் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

இன்றைய முதல் வாசகம் கிறிஸ்து புதிய உடன்படிக்கையின் அரசர் என்பதையும் இரண்டாம் வாசகம் கிறிஸ்து ஒப்புரவின் அரசர் என்பதையும் அறிவுறுத்துகின்றது. எனவே நாம் அனைவரும் கிறிஸ்து ஒருவரே நம் அரசர். அவரிடமே சரணாகதி அடைவோம் என்ற உறுதிப்பாட்டுடன் கிறிஸ்து அரசரை நம் உள்ளத்திலும் இல்லத்திலும் அரசாள்வதற்கு அனுமதிப்போம். அவரின் மேய்ச்சலில் நாம் அனைவரும் நிறைவு காண இத்திருப்பலியில் இணைந்து ஜெபிப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. “நீயே என் மக்கள் இஸ்ரயேலின் ஆயனாய் இருப்பாய்” என்று கூறிய அன்பின் ஆண்டவரே!

எம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதியும். அனைவரையும் ஆசீர்வதித்து, உன் தூய ஆவியின் கொடைகளாலும் கனிகளாலும் நிரப்பி, வழிநடத்த உம் அருள் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. கிறிஸ்து அரசரே எம் இறைவா!

எம் பாரத நாட்டையும், எம் தாயாம் தமிழ்நாட்டையும் ஆசீர்வதியும். நாட்டின் நிலையை அறிந்து, நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டு, மக்களின் அவசிய தேவைகளை தாமதமின்றி நிறைவேற்றி துரிதமாக செயல்படவும், பதவிக்கு அடிமையாகாமல், நாட்டு மக்களிடம் இருந்தே இந்த பதவி வந்தது என்ற எண்ணத்தோடு நாட்டை ஆள நுண்மதி அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஏழைகளையும் நோயாளிகளையும் அரவணைக்கும் அன்பு தெய்வமே!

எம் மத்தியில் வாழும் ஏழை, எளிய மக்களை கண்ணோக்கியருளும். ஒவ்வொரு ஆலய முற்றங்களிலும் இருக்கும் ஏழை, எளிய மக்களையும், மருத்துவமனைகளிலும் இல்லங்களிலும் நோயினால் வாடும் மக்களை நீர் சந்தித்து, அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நிறைவாழ்வு அளிப்பேன் என்றவரே!

இன்று உமது பெருவிழா திருப்பலியில் பங்கெடுக்க வந்திருக்கும் எங்கள் அனைவரையும், அனைவரின் குடும்பங்களையும் ஆசீர்வதியும். நீரே எங்கள் இல்லங்களிலும் உள்ளங்களிலும் அரசராக இருந்து எங்களை ஆட்கொண்டு வழிநடத்த உம் தூய ஆவியின் வல்லமை வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

5. நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள் என்றவரே!

எம் பங்குத்தந்தையை ஆசீர்வதியும். அவர்களுக்கு தேவையான உடல், உள்ள, ஆன்ம நலனைத் தந்து வழி நடத்த வேண்டும் என்றும், இன்றைய வழிபாட்டை சிறப்பிக்கும் அன்பிய குடும்பங்களையும் ஆசீர்வதித்து, சமாதான சந்தோஷத்துடன் வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com